JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-6  Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | 67/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | PW.6– மருத்துவர்.சிவக்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 25.03.2026 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அந்தியூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 22.02.2025–ம் தேதியன்று இரவு மேற்படி மருத்துவமனையில் மருத்துவ அலுவலில் இருந்தபொழுது 45 வயது மதிக்கத்தக்க கந்தசாமி என்பவர் அடிதடி தகராறில் அவரது உறவினர்கள் ஒரு ஆணும், பெண்ணும் அவரை அடித்துவிட்டதாக கூறி சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது...

1. இடது கண்ணுக்கு கீழே 3 செமீ நீளமும், 4 செமீ அகலமும் கொண்ட ஆழமான காயம் காணப்பட்டது.
2. இடது கை சுண்டு விரலில் 3 செமீ நீளமும், 1 செமீ அகலமும் கொண்ட ஆழமான காயம் காணப்பட்டது
3. பின் தலையில் வலி இருப்பதாக கூறினார்.

2 நாட்கள் மருத்துவமனையில் உள் நோயாளியாக தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். பின்னர் மேல் சிகிச்சைக்காக 24.02.2025–ம் தேதியன்று பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 2 நாட்கள் உள்நோயாளியாக தங்கியிருந்து மேற்படி மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றுக் கொண்டார். அவருக்கு ஏற்பட்ட மேற்படி காயங்களில் 1வது

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.25 18:52:27 +0530

காயம் கொடுங்காயம் என்றும் மற்ற 2 காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் குறிப்பிடப்பட்டு காயச்சான்று வழங்கப்பட்டது. **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து பதிவேட்டில் இடது கண்ணுக்கு கீழே 4 சென்டிமீட்டர் ஆழமான காயம் இருந்தது என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மேலும் விபத்து பதிவேட்டில் மேலே சொன்ன முதல் காயம் கொடுங்காயம் என குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மேலே சொன்ன காயங்கள் ஒரு நபர் தடுக்கி கீழே விழுந்தால் ஏற்படக்கூடும் என்றால், சரிதான். ஒரு நபர் வலியில்லாமல் கூட தலையில் வலி இருப்பதாக சொல்லலாம் என்றால், சரிதான். யார் அடித்தார்கள் என்று எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.25 18:52:34 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani